# சென்மதி நிலுவை

## பொதுவான போக்குகள்

உயர்வான கேள்வியின் உறுதியான அழுத்தம், வெளிநாட்டு வர்த்தக மாற்று விகிதம் தொடர்ச்சியாக மோசமடைந்தமை, வெளிநாட்டு மூலதனத்தின் உட்பாய்ச்சலில் ஏற்பட்ட வீழ்ச்சி என்பன 1994 இல் சென்மதி நிலுவையின் திரண்ட மிகையில் கடுமையான வீழ்ச்சியை ஏற்படுத்தின. உயர்வான மொத்தக் கேள்வி காரணமாக இறக்குமதிகள் மீதான செலவு உயர்வடைந்தமையினதும் வர்த்தக மாற்று விகிதம் 4.7 சதவீதத்தால் மேலும் மோசமடைந்தமையினதும் தாக்கத்தினால் வர்த்தகப் பற்றாக்குறை 1993 இன் சிஎஉ 8,250 இலட்சத்திலிருந்து (ரூ. 554,860 இலட்சம் அல்லது மொ. உ. உற்பத்தியில் 11.1 சதவீதம்) 1994 இல் சிஎஉ 10,950 இலட்சத்திற்கு (ரூ. 776,440 இலட்சம் அல்லது மொ. உ. உற்பத்தியில் 13.4 சதவீதம், விரிவடைந்தது. பணிகள் தொடர்பான உட்பாய்ச்சல்களில் சில முன்னேற்றங்கள் காணப்பட்டபோதிலும் பணிகள் கணக்கின் மிகையும் 1993 இன் சிஎஉ 280 இலட்சத்திலிருந்து 1994 இல் சிஎஉ 120 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இது இலங்கைக்கும் பன்னாட்டுச் சந்தைகளுக்கும் இடையிலான குறைவான வட்டிவீத வேறுபாடுகள் மற்றும் இவ்வாண்டில் நிலவிய உறுதியற்ற அரசியல் நிலையுடன் இணைந்த பாதகமான பேரண்டப் பொருளாதார அபிவிருத்திகள் என்பனவற்றின் விளைவாக பயணங்களினதும் இலாபங்கள் மற்றும் பங்கிலாபங்களின் வெளியனுப்பல்களினதும் பெருமளவிலான வெளிப்பாய்ச்சல்கள் காரணமாக ஏற்பட்டதாகும். அதேவேளை தனியார் மாற்றல்கள் முந்திய ஆண்டின் 17 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 10 சதவீதங்கொண்ட குறைவான வேகத்தில் வளர்ச்சியடைந்தபோதிலும் அது இலங்கையிலிருந்து தூரகிழக்கிற்கு குடியகன்று சென்ற வேலையாட்களது பணவனுப்பல்கள் தொடர்ச்சியாக அதிகரித்து நாட்டின் வெளிநாட்டுச் சொத்துக்களுக்கு பலம்வாய்ந்த தாங்கிருப்பினை வழங்கியமையைப் பிரதிபலித்தது. எனினும் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையானது (அலுவல்சார் மாற்றல்கள் நீங்கலாக) உயர்வான வர்த்தகச் சமமின்மையினால் மிகவும் பாதிக்கப்பட்டு சிஎஉ 2,500 இலட்சத்திலிருந்து 1994 இல் சிஎஉ 6,460 இலட்சத்திற்கு அதிகரித்தமை காரணமாக நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை / மொ.உ.உ. விகிதம் 1993 இன் 5.3 சதவீதத்திலிருந்து 1994 இல் 7.9 சதவீதத்திற்கு உயர்வடைந்தது. சிஎஉ 1,150 இலட்சங்கொண்ட (ரூ. 80,690 இலட்சம்) அலுவல்சார் மாற்றல்களுக்குச் சீராக்கம் செய்யப்பட்ட நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை மொஉஉ இன் விகிதாசாரமாக 1993 இன் 3.8 சதவீதத்திலிருந்து 1994 இல் 6.5 சதவீதத்திற்கு உயர்வடைந்தது.

1994 இல் மூலதனக் கணக்கு குறிப்பிடத்தக்களவு மிதமடைந்தது. எதிர்பார்க்கப்படாத பேரண்டப் பொருளாதார நிலைமைகள், நாட்டின் தேர்தல்கள் காரணமாக ஏற்பட்ட கணிசமான கொள்கைத் தளர்வுகள், இலங்கைக்கும் பன்னாட்டு நிதியியல் சந்தைகளுக்கும் இடையிலான குறைவான வட்டிவீத வேறுபாடுகள் என்பனவற்றின் காரணமாகப் பட்டியலிடப்பட்ட முதலீட்டில் கணிசமான வீழ்ச்சிகாணப்பட்டதுடன் நேரடி வெளிநாட்டு முதலீடுகளில் கணிசமான தணிப்பும் காணப்பட்டது. இதனால் இவற்றின் பேரிலான மூலதன உட்பாய்ச்சல்கள் 1993 இன் சிஎஉ 1,820 இலட்சங்களிலிருந்து 1994 இல் சிஎஉ 1,310 இலட்சத்திற்கு

## சென்மதி நிலுவை

காலாண்டுதோறும்




இலங்கை மத்திய வங்கி

## அட்டவணை 1.52

## சென்மதி நிலுவை - பகுப்பாய்வு வெளிப்படுத்துகை 1990 – 1994

| | சி.எ.உ. பத்து இலட்சம் | | | | | பத்து இலட்சம் ரூபாய்களில் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1990 | 1991 | 1992 | 1993 (அ) | 1994 (ஆ) | 1990 | 1991 | 1992 | 1993 (அ) | 1994 (ஆ) |
| 1. வணிகப் பொருட்கள் | -518 | -726 | -740 | -825 | 1,095 | - 28,145 | - 41,252 | - 45,785 | - 55,486 | 77,644 |
| ஏற்றுமதிகள் ... | 1,456 | 1,491 | 1,745 | 2,046 | 2,236 | 79,481 | 84,379 | 107,855 | 138,174 | 158,554 |
| இறக்குமதிகள் ... | 1,974 | 2,217 | 2,485 | 2,871 | 3,331 | 107,626 | 125,631 | 153,640 | 193,660 | 236,198 |
| 2. பணிகள் ... | -72 | -65 | -23 | 28 | 12 | -3,905 | - 3,773 | - 1,430 | 1,821 | 820 |
| பெறுகைகள் ... | 391 | 440 | 489 | 535 | 627 | 21,365 | 24,897 | 30,256 | 36,050 | 44,363 |
| கொடுப்பனவுகள் ... | 463 | 505 | 513 | 507 | 615 | 25,269 | 28,670 | 31,686 | 34,229 | 43,543 |
| 3. பொருட்களும் பணிகளும் (1 + 2) ... | -590 | -791 | -763 | -797 | - 1,083 | - 32,050 | -45,025 | - 47,215 | -53,665 | - 76,824 |
| 4. மாற்றல்கள் (தேறிய) ... | 398 | 441 | 457 | 517 | 552 | 21,660 | 25,030 | 28,280 | 34,839 | 39,057 |
| தனியார் (தேறிய) ... | 268 | 293 | 328 | 402 | 438 | 14,518 | 16,623 | 20,253 | 27,090 | 30,989 |
| அலுவலர் சார் (தேறிய) ... | 130 | 148 | 130 | 115 | 115 | 7,142 | 8,407 | 8,027 | 7,749 | 8,069 |
| 5. நடைமுறைக்கணக்கு நிலுவை (3 + 4) ... | -192 | -350 | -306 | -281 | - 531 | - 10,390 | - 19,995 | - 18,935 | - 18,825 | - 37,767 |
| 6. நாணயமல்லா மூலதனம் (தேறிய) ... | 345 | 475 | 381 | 612 | 674 | 18,931 | 27,171 | 23,450 | 41,066 | 48,058 |
| நேரடி முதலீடு ... | 24 | 46 | 86 | 135 | 111 | 1,294 | 2,633 | 5,315 | 9,107 | 7,815 |
| பட்டியலிடப்பட்ட முதலீடு ... | 7 | 24 | 18 | 48(இ) | 20 | 390 | 1,329 | 1,122 | 3.272 | 1,334 |
| தனியார் நீண்ட காலம் (தேறிய) ... | -33 | -18 | 18 | 135 | 216 (இ) | - 1,835 | - 1,005 | 1,162 | 8,998(இ) | 15,628 (இ) |
| தனியார் குறுகிய காலம் (தேறிய) ... | 48 | 35 | 91 | 105 | 182 | 2,685 | 2,105 | 5,652 | 7,110 | 12,933 |
| அரசு நீண்ட காலம் (தேறிய) ... | 299 | 366 | 189 | 190 | 146 | 16,397 | 20,849 | 11,494 | 12,579 | 10,348 |
| உட்பாய்ச்சல் ... | 392 | 463 | 313 | 334 | 283 | 21,497 | 26,378 | 19,193 | 22,317 | 20,050 |
| வெளிப்பாய்ச்சல் ... | 93 | 97 | 124 | 144 | 137 | 5,100 | 5,529 | 7,699 | 9,738 | 9,702 |
| அரசு குறுகிய காலம் ... | – | 23 | -22 | – | – | – | 1,260 | -1,295 | – | – |
| 7. பெறுமதி சீராக்கங்கள் ... | – | – | – | – | – | 751 | 235 | 1,555 | -1,420 | -1,380 |
| 8. சிஎஉ ஒதுக்கீடுகள் ... | – | – | – | – | – | – | – | – | – | – |
| 9. பிழைகளும் தவிர்ப்புக்களும் ... | -14 | +28 | +59 | +44 | + 29 | -1,812 | +2,729 | +3,399 | +3,328 | + 8,255 |
| 10. மொத்த நிலுவை ... | +138 | +152 | +133 | +375 | + 173 | + 7,480 | +10,140 | + 9,469 | + 24,149 | + 17,166 |
| 11. நாணய அசைவுகள் (- மிகை) ... | -138 | -152 | -133 | -375 | - 173 | - 7,480 | - 10,140 | - 9,469 | - 24,149 | - 17,166 |
| செலாவணி வீதம் ரூ/சிஎஉ ... | | | | | | 54.42 | 56.61 | 61.75 | 67.39 | 70.75 |
| மொ. உ. உ. இன் விகிதமாக சதவீதங்களில் | | | | | | | | | | |
| வர்த்தகக் கணக்கு | | | | | | - 8.75 | - 11.07 | - 10.82 | - 11.10 | - 13.41 |
| நடைமுறைக் கணக்கு | | | | | | - 3.23 | - 5.37 | - 4.47 | - 3.77 | - 6.53 |
| நடைமுறைக் கணக்கு, கொடைகள் நீங்கலாக | | | | | | - 5.45 | - 7.62 | - 6.37 | - 5.32 | - 7.92 |

(அ) திருத்தப்பட்டது

(ஆ) தற்காலிகமானவை

(இ) முன்னைய ஆண்டுகளில் முற்பணம் செலுத்தப்பட்டிருந்த நான்கு வானூர்திகளின் இறக்குமதியின் பேரிலான மூலதன உட்பாய்ச்சல்களுக்கான சீராக்கங்களையும் உள்ளடக்கும்

மூலம் : இலங்கை மத்திய வங்கி

குறிப்பு : நாணயத்துறையிலுள்ள எல்லா கொடுக்கல் வாங்கல்களும் ஆண்டிறுதியின் செலாவணி வீதங்களில் மாற்றப்பட்டுள்ளன.

வீழ்ச்சியுற்றன. வெளிநாட்டு உதவி தொடர்ந்து குறைவாகப் பயன்படுத்தப்பட்டமையின் காரணமாக அரசிற்கான மூலதன உட்பாய்ச்சலும் 1993 இன் சிஎஉ 3,340 இலட்சத்திலிருந்து 1994 இல் சிஎஉ 2,830 இலட்சத்திற்கு வீழ்ச்சியுற்றது. அதேவேளை தனியார் குறுங்கால மற்றும் நீண்டகாலக் கடன் மூலதன உட்பாய்ச்சல்கள் 1993 இன் சிஎஉ 2,400 இலட்சத்திலிருந்து 1994 இல் சிஎஉ 3,980 இலட்சத்திற்கு கணிசமாக உயர்வடைந்து நாட்டின் வெளிநாட்டுப் படுகடனை அதிகரிக்கச் செய்தது. இது பெரும்பாலும் எயர்லங்கா வானூர்தித் தொகுதிப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டத்திற்கான நிதியிடல் ஒழுங்குகள், தனியார் குறுங்கால வர்த்தகக் கடன்கள், முதலீட்டுச் சபையின் கீழான தொழில் முயற்சியாளர்களினால் வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் பிரிவுகளிலிருந்து பெறப்பட்ட தேறிய கடன் பெறுகைகள் என்பனவற்றின் காரணமாக ஏற்பட்டதாகும். மூலதனக் கணக்கில் உள்ள எல்லாக் கொடுக்கல் வாங்கல்களினதும் இணைந்த விளைவாக நாணயமல்லா மூலதனம் இவ்விரு காலப்பகுதிக்குமிடையே சிஎஉ 6,120 இலட்சத்திலிருந்து (ரூ. 410,660 இலட்சம்) சிஎஉ 6,740 இலட்சத்திற்கு (ரூ. 480,580 இலட்சம்) மிதமாக அதிகரித்தது. இதன் விளைவாகச் சென்மதி நிலுவை முந்திய ஆண்டின் சிஎஉ 3,750 இலட்சத்துடன் (ரூ. 241,490 இலட்சம்) ஒப்பிடுகையில் 1994 இல் சிஎஉ 1,730 இலட்சம் (ரூ. 171,660 இலட்சம்) கொண்ட திரண்ட மிகையினைப் பதிவு செய்தது. இந்நடவடிக்கைகள் காரணமாக இலங்கையின் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் 1993 இறுதியின் சிஎஉ 15,440 இலட்சத்திலிருந்து (ரூ. 1,052,580 இலட்சம்) 1994 இறுதியில் சிஎஉ 17,920 இலட்சத்திற்கு (ரூ. 1,303,400 இலட்சம்) அதிகரித்தன.

அதேவேளை 1994 மாச்சில் இலங்கை பன்னாட்டு நாணய நிதியத்தின் ஒப்பந்த உறுப்புரை VIII இன் கீழான கடப்பாடுகளை ஏற்றுக் கொண்டதையடுத்து நடைமுறைக் கணக்குக் கொடுக்கல் வாங்கல்கள் மீதான அதன் கட்டுப்பாடுகள் அனைத்தையும் நீக்கியதுடன் அத்தகைய கொடுக்கல் வாங்கல்களைத் தீர்ப்பதில் இலங்கை ரூபாவினைத் தடையின்றிப் பிரயோகிக்கவும் அனுமதித்தது. இது நாட்டில் தற்போது நடைமுறையில் உள்ள தாராளமயமாக்கல் நிகழ்ச்சித்திட்டத்தில் முக்கிய படியாக அமைந்தது. இலங்கையின் வெளிநாட்டுச் சொத்துக்கள் ஏறத்தாழ 6 மாத இறக்குமதிகளை நிதியிடுவதற்குப் போதுமான மட்டத்தினை அடைந்துள்ள போதிலும் 1994 இல் சென்மதி நிலுவையின் பொதுவான அபிவிருத்திகள் சென்மதி நிலுவையின் மீது தொடர்ந்து காணப்படும் உயர்வான கேள்வி அழுத்தத்தின் தாக்கத்தினையும் திறந்த பொருளாதார சூழ்நிலையில் இலங்கைப் பொருளாதாரம் வலுப்பெறுவதற்குச் சிறப்பான நாணய மற்றும் இறைக் கொள்கைகளைக் கொண்ட வழிமுறையினூடாக உறுதியான பேரண்டப் பொருளாதாரச் சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டிய தேவையையும் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது.

## சென்மதி நிலுவைச் செயலாற்றம்

### வணிகக் கணக்கு

1994 இல் இறக்குமதிகள், ஏற்றுமதிகளின் பாய்ச்சலானது வர்த்தகக் கணக்கினை குறிப்பிடத்தக்களவு மோசமடையச் செய்தது. ஏற்றுமதித்துறையின் வருவாய்கள் 1993 இன் சிஎஉ 20,460 இலட்சத்திலிருந்து (ரூ. 1,381,740 இலட்சம்) 1994 இல் சிஎஉ 22,360 இலட்சத்திற்கு (ரூ. 1,585,540 இலட்சம்) 9 சதவீதத்தினால்

மிதமாக அதிகரித்தது. 1993 இல் ஏற்றுமதித்துறை 17 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. குறிப்பாக தேயிலை, அணியும் ஆடைகள் என்பனவற்றின் பாதகமான ஏற்றுமதி விலைகளின் காரணமாக வேளாண்மை, கைத்தொழில் மற்றும் ஏனைய சிறு ஏற்றுமதிகள் போன்ற முக்கிய ஏற்றுமதி வகைகள் அனைத்திலும் குறைந்த விரிவாக்க வீதமொன்று அவதானிக்கப்பட்டது. அதேவேளையில் முதலீட்டு மற்றும் நுகர்வுப் பொருட்களின், குறிப்பாக சீனி மற்றும் ஏனைய நீடித்த நுகர்வுப் பொருட்கள் என்பனவற்றின் இறக்குமதிகளது அதிகரித்த கேள்வியின் காரணமாக இறக்குமதிகள் மீதான செலவு 16 சதவீதத்தினால் 1993 இன் சிஎஉ 28,710 இலட்சத்திலிருந்து (ரூ. 1,936,600 இலட்சம்) 1994 இல் சிஎஉ 33,310 இலட்சத்திற்கு (ரூ. 2,361,980 இலட்சம்) அதிகரித்தது. பொருளாதாரத்தின் பொதுவான அதிகரிப்புக்குத் தேவையான பொறிகள், கருவிகள் மற்றும் ஏனைய மூலதனப் பொருட்கள் என்பனவற்றின் இறக்குமதிகளின் மீதான செலவினங்களில் ஏற்பட்ட அதிகரிப்புடன் வானூர்தி மீள் தொகுதிப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஐ. அ. டொலர் 2,280 இலட்சம் செலவில் எயர்லங்காவினால் இறக்குமதி செய்யப்பட்ட இரு வானூர்திகளின் செலவினையும் முதலீட்டுப் பொருட்கள் மீதான செலவில் ஏற்பட்ட அதிகரிப்பு பிரதிபலித்தது. இதன் விளைவாக 1994 இல் வர்த்தகப் பற்றாக்குறையானது சிஎஉ 8,250 இலட்சத்திலிருந்து (ரூ. 554,860 இலட்சம்) சிஎஉ 10,950 இலட்சத்திற்கு (ரூ. 776,440 இலட்சம்) அதிகரித்தது. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதமொன்றாக பற்றாக்குறை 1993 இன் 11.1 சதவீதத்திலிருந்து 1994 இல் 13.4 சதவீதத்திற்கு அதிகரித்தது. இறக்குமதிகளின் விதிவிலக்கு விடயமான வானூர்திகள் நீக்கப்பட்ட பின்னரும் கூட மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதமொன்றாக வர்த்தகப் பற்றாக்குறை 1993 இன் 10.3 சதவீதத்திலிருந்து 1994 இல் 11.5 சதவீதத்திற்கு அதிகரித்தது.

**பணிகள் கணக்கு**

பணிகள் கணக்கில் பெறுகைகள் 1993இன் சிஎஉ 5,350 இலட்சத்திலிருந்து 1994 இல் சிஎஉ 6,270 இலட்சத்திற்கு அதிகரித்தவேளையில் கொடுப்பனவுகள் சிஎஉ 5,070 இலட்சத்திலிருந்து சிஎஉ 6,150 இலட்சத்திற்கு அதிகரித்தன. இதன்படி பணிகள் கணக்கின் மிகையானது 1993 இன் சிஎஉ 280 இலட்சத்திலிருந்து (ரூ. 18,210 இலட்சம்) 1994 இல் சிஎஉ 120 இலட்சத்திற்கு (ரூ. 8,200 இலட்சம்) வீழ்ச்சியடைந்தது. பெறுகைகள் பக்கத்தில் குறிப்பாக துறைமுகம், போக்குவரத்து, காப்புறுதி, பயணம் மற்றும் ஏனைய பணிகள் போன்ற அனைத்து முதன்மை வகைப்பணிகளிலும் மேம்பட்ட செயலாற்றமொன்று பதிவு செய்யப்பட்டது. 1982 இல் பதிவு செய்யப்பட்ட உச்ச மட்டத்தினையும் விஞ்சும் வகையில் சுற்றுலா வருகைகள் அமைந்தமையினாலும் தொடர்ந்து சுற்றுலா வருகையாளர்கள் ஒவ்வொருவரினதும் நாளொன்றுக்கு சராசரியாகச் செலவிடப்பட்ட தொகை அதிகரித்தமையினாலும் பயணம் மீதான பெறுகைகள் 1993 இன் 5 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1994 இல் 10 சதவீதத்தினால் சிஎஉ 1,610 இலட்சத்திற்கு அதிகரித்தன. எனினும் இலங்கையர்களின் அதிகரித்த வெளிநாட்டுப் பயணத்தைப் பிரதிபலிக்கும் வகையில் பயணம் தொடர்பான வெளிப்பாய்ச்சல்களில் கணிசமான அதிகரிப்புக் காணப்பட்டது.

மத்திய வங்கியினால் உடைமையாக வைத்திருக்கப்பட்ட வெளிநாட்டுச் சொத்துக்கள் 1993 இன் சிஎஉ 11,940 இலட்சத்திலிருந்து 1994 இல் சிஎஉ 13,730

## அட்டவணை 1.53

### பணிகளும் மாற்றல்களும் 1990 – 1994

| விடயம் | சிஎஉ ப. இ | | | | | ரூ. ப. இ. | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1990 | 1991 | 1992 | 1993 (அ) | 1994 (ஆ) | 1990 | 1991 | 1992 | 1993 (அ) | 1994 (ஆ) |
| 1. துறைமுக போக்குவரத்து, காப்புறுதி ... | 10 | 28 | 32 | 73 | 96 | 522 | 1,588 | 1,965 | 4,944 | 6,825 |
| வரவுகள் ... | 125 | 150 | 157 | 171 | 207 | 6,816 | 8,497 | 9,696 | 11,509 | 14,626 |
| கொடுப்பனவுகள் ... | 115 | 122 | 121 | 98 | 111 | 6,293 | 6,909 | 7,731 | 6,565 | 7,801 |
| 2. பயணம் ... | 40 | 45 | 60 | 60 | 43 | 2,190 | 2,545 | 3,711 | 3,984 | 2,995 |
| வரவுகள் ... | 94 | 116 | 139 | 146 | 161 | 5,143 | 6,571 | 8,573 | 9,815 | 11,375 |
| கொடுப்பனவுகள் ... | 54 | 71 | 79 | 86 | 118 | 2,953 | 4,026 | 4,862 | 5,831 | 8,380 |
| 3. முதலீட்டு வருவாய் ... | -123 | -130 | -127 | -88 | -113 | -6,685 | -7,367 | -7,821 | -5,959 | -8,028 |
| வரவுகள் ... | 68 | 40 | 48 | 79 | 100 | 3,728 | 2,259 | 2,997 | 5,366 | 7,111 |
| கொடுப்பனவுகள் ... | 191 | 170 | 175 | 168 | 213 | 10,413 | 9,626 | 10,818 | 11,345 | 15,139 |
| 3.1 இலாபங்களும் பங்கிலாபங்களும் ... | -19 | -13 | -22 | -19 | -51 | -1,006 | -718 | -1,391 | -1,316 | -3,666 |
| வரவுகள் ... | – | 2 | 1 | 4 | 1 | 11 | 89 | 84 | 279 | 33 |
| கொடுப்பனவுகள் ... | 19 | 14 | 24 | 24 | 51 | 1,017 | 807 | 1,476 | 1,595 | 3,699 |
| 3.2 வட்டி ... | -104 | -117 | -104 | -69 | -62 | -5,679 | -6,649 | -6,430 | -4,662 | -4,362 |
| வரவுகள் ... | 68 | 38 | 47 | 75 | 99 | 3,717 | 2,170 | 2,913 | 5,087 | 7,078 |
| கொடுப்பனவுகள் ... | 172 | 156 | 151 | 144 | 161 | 9,396 | 8,820 | 9,342 | 9,750 | 11,440 |
| 4. அரச பணிகள் ... | -3 | -3 | -3 | -11 | -9 | -195 | -170 | -176 | -714 | -657 |
| வரவுகள் ... | 11 | 17 | 14 | 11 | 17 | 586 | 953 | 825 | 736 | 1,225 |
| கொடுப்பனவுகள் ... | 14 | 20 | 16 | 22 | 27 | 781 | 1,123 | 1,001 | 1,450 | 1,881 |
| 5, ஏனைய பணிகள் ... | 5 | -5 | 15 | -6 | -5 | 263 | -369 | 891 | -415 | -316 |
| வரவுகள் ... | 93 | 117 | 132 | 127 | 142 | 5,092 | 6,616 | 8,165 | 8,623 | 10,025 |
| கொடுப்பனவுகள் ... | 88 | 122 | 117 | 134 | 146 | 4,829 | 6,985 | 7,273 | 9,038 | 10,342 |
| 6. மொத்தப் பணிகள் ... | -72 | -65 | -23 | 28 | 12 | -3,905 | -3,773 | -1,430 | 1,821 | 820 |
| வரவுகள் ... | 391 | 440 | 489 | 535 | 627 | 21,365 | 24,897 | 30,256 | 36,050 | 44,363 |
| கொடுப்பனவுகள் ... | 463 | 505 | 513 | 507 | 615 | 25,269 | 28,670 | 31,686 | 34,229 | 43,543 |
| 7. தனியார் மாற்றல்கள் ... | 268 | 293 | 328 | 402 | 438 | 14,518 | 16,623 | 20,253 | 27,090 | 30,989 |
| வரவுகள் ... | 296 | 323 | 389 | 454 | 499 | 16,054 | 18,311 | 24,037 | 30,592 | 35,345 |
| கொடுப்பனவுகள் ... | 28 | 30 | 61 | 52 | 61 | 1,536 | 1,688 | 3,784 | 3,501 | 4,357 |
| 8. அலுவல்சார் மாற்றல்கள் | 130 | 148 | 130 | 115 | 115 | 7,142 | 8,407 | 8,027 | 7,749 | 8,069 |
| வரவுகள் ... | 130 | 148 | 130 | 115 | 115 | 7,142 | 8,407 | 8,027 | 7,749 | 8,069 |
| கொடுப்பனவுகள் ... | – | – | – | – | – | – | – | – | – | – |
| 9. மொத்த மாற்றல்கள் ... | 398 | 441 | 457 | 517 | 552 | 21,660 | 25,030 | 28,280 | 34,839 | 39,057 |
| வரவுகள் ... | 426 | 471 | 519 | 569 | 614 | 23,196 | 26,718 | 32,064 | 38,341 | 43,414 |
| கொடுப்பனவுகள் ... | 28 | 30 | 61 | 52 | 61 | 1,536 | 1,688 | 3,784 | 3,501 | 4,357 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

(அ) திருத்தப்பட்டது.
(ஆ) தற்காலிகமானவை

குறிப்பு : 1993 ஆம் ஆண்டின் பின்னர் தரவுச் சேகரிப்பு முறை திருத்தப்பட்டுள்ளமையால் பணிகள் துறையின் குறிப்பாக வகைகள் 1, 4 மற்றும் 5 இன் பகுப்பாய்வுகள் முன்னைய ஆண்டுகளுடன் நேரடியாக ஒப்பிடத்தக்கனவல்ல.

இலட்சத்திற்கு கணிசமாக அதிகரித்ததன் பெருமளவு காரணத்தினால் 1994 இல் முதலீட்டு வருமான உட்பாய்ச்சல்கள் 27 சதவீதத்தினால் சிஎஉ 1,000 இலட்சத்திற்கு அதிகரித்தன. வட்டிக் கொடுப்பனவுகளின் பேரிலான வெளிப்பாய்ச்சல்கள் சிஎஉ 170 இலட்சத்தினால் சிஎஉ 1,610 இலட்சத்திற்கு அதிகரித்தவேளையில் இலாபங்கள் பங்கிலாபங்களின் வெளிப்பாய்ச்சல் சிஎஉ 280 இலட்சத்தினால் சிஎஉ 510 இலட்சத்திற்கு அதிகரித்தன. முதலீடுகளிலிருந்து கிடைத்த உயர்ந்த வீத வருவாய் காரணமாக இலாபங்களினதும் பங்கிலாபங்களினதும் பெரும்பாகமொன்று நாட்டில் தடுத்து வைத்திருக்கப்பட்டிருந்த முன்னைய ஆண்டின் அவதானிப்பிலிருந்தும் இது மாறுபட்டதாக அமைந்தது.

**மாற்றல்கள் கணக்கு**

மாற்றல்கள் கணக்கின் தேறிய உட்பாய்ச்சல்கள் குறிப்பாக தனியார் மாற்றல் மீதானவை நாட்டின் வெளிநாட்டு உட்பாய்ச்சல்களின் முக்கியமூலமாகத் தொடர்ந்து காணப்பட்டன. பொருட்கள், பணிகள், மாற்றல்கள் என்பனவற்றின் மொத்த வரவுகளில் ஏறத்தாழ 14 சதவீதத்திற்கு வகைகூறும் தனியார் மாற்றல்கள் 1993 இன் சிஎஉ 4,540 இலட்சத்திலிருந்து (ரூ. 305,920 இலட்சம்) 1994 இல் சிஎஉ 4,990 இலட்சத்திற்கு (ரூ. 353,450 இலட்சம்) அதிகரித்து இலங்கையிலிருந்து குடியகன்று சென்ற வேலையாட்கள் குறிப்பாக மத்திய கிழக்கிற்குச் சென்றவர்களது பணவனுப்பல்கள் தொடர்ந்து அதிகரித்தமையைப் பிரதிபலித்தது. எனினும் தனியார் மாற்றல்களின் உட்பாய்ச்சல்களில் ஏற்பட்ட அதிகரிப்பு வீதம் 1993 இன் 17 சதவீதத்திலிருந்து 1994 இல் 10 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. 1994 இல் உள்நாட்டு வட்டிவீதங்கள் வீழ்ச்சியடைந்தமைக்கும் பன்னாட்டு வட்டிவீதங்கள் அதிகரித்தமைக்கும் இசைவாக வட்டிக்கேற்ப அடிக்கடிமாறும் மாற்றல்கள் மிதமடைந்தமையே இவ்வீழ்ச்சிக்கு ஓரளவு காரணமாயிருக்கலாம். அதேவேளை தனியார் மாற்றல்களின் பேரிலான வெளிப்பாய்ச்சல்கள் 1993 இன் சிஎஉ 520 இலட்சத்திலிருந்து (ரூ. 35,010 இலட்சம்) 1994 இல் சிஎஉ 610 இலட்சத்திற்கு (ரூ. 43,570 இலட்சம்) அதிகரித்தன. இது இலங்கையிலிருந்து குடியகன்றோரின் சொத்து மாற்றல் மீதான கட்டுப்பாடுகள் 1993 இல் தளர்த்தப்பட்டமையின் முழுமையான தாக்கம் 1994 இல் உணரப்பட்டமையின் விளைவாக ஏற்பட்டதாகும். அலுவலக மாற்றல்கள் 1993 இன் அதே மட்டத்தில் சிஎஉ 1,150 இலட்சமாக விளங்கின. தனியார் மற்றும் அலுவல்சார் மாற்றல்களின் இணைந்த விளைவாக மாற்றல்கள் கணக்கின் தேறிய உட்பாய்ச்சல்கள் 1993 இன் சிஎஉ 5,170 இலட்சத்திலிருந்து (ரூ. 348,390 இலட்சம்) 1994 இல் சிஎஉ 5,520 இலட்சத்திற்கு (ரூ. 390,570 இலட்சம்) அதிகரித்தன.

**நடைமுறைக்கணக்கு**

வர்த்தகக் கணக்கு மோசமடைந்தமையின் விளைவாக நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை 1993 இன் சிஎஉ 2,810 இலட்சத்திலிருந்து (ரூ. 188,250 இலட்சம்) 1994 இல் சிஎஉ 5,310 இலட்சத்திற்கு (ரூ. 377,670 இலட்சம்) விரிவடைந்தது. மொஉஉ இன் விகிதாசாரமாக இக்குறை 1993 இன் 3.8 சதவீதத்திலிருந்து 1994 இல் 6.5 சதவீதத்திற்கு அதிகரித்தது. கொடைகள் நீங்கலாக இவ்விகிதம் 1993 இன் 5.3 சதவீதத்திலிருந்து 1994 இல் 7.9 சதவீதத்திற்கு

உயர்வடைந்தது. நடைமுறைக் கணக்கில் இருவருடங்கள் காணப்பட்ட தொடர்ச்சியான மேம்பாட்டிற்குப்பின் ஏற்பட்ட இம்மோசமான நிலை உயர்வான கேள்வி அழுத்தத்தின் விளைவாகப் பொருளாதாரத்தில் முதலீடு – சேமிப்பிற்கிடையிலான இடைவெளி விரிவடைந்து செல்வதன் காரணமாக இது 1994 இன் சென்மதி நிலுவையின் அபிவிருத்தியில் அக்கறைப்பட வேண்டிய ஒரு விடயமாக இருந்தது. எனினும் மொத்த இறக்குமதிகளில் முதலீட்டுப் பொருட்களின் பங்கு 2.5 சதவீதப் புள்ளிகளால் அதிகரித்தவேளையில் நுகர்வோர் பொருட்களின் பங்கு 0.2 சதவீதத்தால் மட்டும் அதிகரித்திருப்பதால் உயர்வான கேள்வி அழுத்தமானது சேமிப்பில் வீழ்ச்சி ஏற்பட்டிருப்பதனை விட முதலீடு அதிகரித்திருப்பதையே தெளிவாகக் காட்டுகின்றது.

### மூலதனக் கணக்கு

1993 இல் நிலவிய மூலதன உட்பாய்ச்சலின் எழுச்சிக்கு மாறாக 1994 இல் மூலதனக் கணக்கின் உட்பாய்ச்சல்களில் கணிசமான தணிப்புக் காணப்பட்டதுடன் உறுதியற்ற உள்நாட்டு அரசியல் மற்றும் பொருளாதாரச் சூழ்நிலை பற்றிய முதலீட்டாளர் புலனுணர்வினையும் பிரதிபலித்தது. நாணயமல்லா தேறிய மூலதன உட்பாய்ச்சல்கள் 1993 இல் பதிவு செய்யப்பட்ட 61 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1994 இல் சிஎஉ 6,740 இலட்சத்திற்கு 10 சதவீதத்தால் மட்டும் அதிகரித்தன. நேரடி வெளிநாட்டு முதலீடுகள் பட்டியலிடப்பட்ட முதலீடுகள் என்பனவற்றின் வடிவில் அமைந்த தனியார்துறைக்கான உட்பாய்ச்சல்களிலும் அரசுக்கான கடன் பகிர்ந்தளிப்புக்களிலும் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி காணப்பட்டது.

வர்த்தகத் தொழிற்பாட்டில் ஈடுபட்டிருந்த முதலீட்டுச் சபைத் தொழில் முயற்சிகளின் எண்ணிக்கை 1993 இன் 94 இலிருந்து 1994 இல் 137 இற்கு அதிகரித்த போதிலும் நேரடி வெளிநாட்டு முதலீடு 1993 இன் சிஎஉ 1,340 இலட்சத்திலிருந்து 1994 இல் சிஎஉ 1,110 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. பட்டியலிடப்பட்ட முதலீட்டுக்கான வெளிநாட்டு மூலதனத்தின் தேறிய உட்பாய்ச்சல்களும் 1993 இன் சிஎஉ 480 இலட்சத்திலிருந்து 1994 இல் சிஎஉ 200 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. உண்மையில் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் வெளிநாட்டவர்களின் பங்கு விற்பனைகள் மாச்சு, ஏப்பிறல் மாதங்களிலும் 1994 இறுதிக்காலாண்டிலும் கொள்வனவுகளை விஞ்சியிருந்தன. பட்டியலிடப்பட்ட முதலீடுகளின் கணிசமான வீழ்ச்சியானது அபிவிருத்தியடைந்த நாடுகளின் மேம்பட்ட முதலீட்டு சூழலினையும் தேசிய தேர்தல்களின் மத்தியில் கொள்கை முரண்பாடுகள் பற்றிய முதலீட்டாளர்களின் முன்னெச்சரிக்கைப் போக்கினையும் பிரதிபலிப்பதாக இருந்தது.

பெரும்பாலும் சலுகை அடிப்படையிலான வெளிநாட்டு நிதியியல் வசதிகளை உள்ளடக்கிய அரசிற்கான தேறிய மூலதனப் பாய்ச்சல்களும் 1993 இன் சிஎஉ 1,900 இலட்சத்திலிருந்து (ரூ. 125,790 இலட்சம்) 1994 இல் சிஎஉ 1,460 இலட்சத்திற்கு (ரூ. 103,480 இலட்சம்) 23 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. இவ்வீழ்ச்சிக்கு சலுகையற்ற கடன்களை குறைவாக நாடியமையே பெருமளவு காரணமாக அமைந்தது. அரசுக்கான தேறிய வெளிநாட்டு மூலதனப் பாய்ச்சல்கள் 1993 இன் சிஎஉ 3,340 இலட்சத்திலிருந்து 1994 இல் சிஎஉ 2,830 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தபோதிலும் செயற்றிட்டக் கடன்களுக்கான பகிர்ந்தளிப்புக்கள் சிஎஉ

1,920 இலட்சத்திலிருந்து சிஎஉ 2,590 இலட்சத்திற்கு அதிகரித்தன. அரசுக்கு நிதி உதவிய முக்கிய மூலமாக யப்பான் விளங்கியது. யப்பானியக் கடன்களின் பயன்பாடானது 1993 இன் சிஎஉ 660 இலட்சத்திலிருந்து 1994 இல் சிஎஉ 1,260 இலட்சத்திற்கு அதிகரித்தவேளையில் ஆசிய அபிவிருத்தி வங்கி, பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பு என்பனவற்றினது கடன்களின் பயன்பாடு 1993 இன் முறையே சிஎஉ 880 இலட்சத்திலும் சிஎஉ 870 இலட்சத்திலுமிருந்து 1994 இல் சிஎஉ 640 இலட்சத்திற்கும் சிஎஉ 540 இலட்சத்திற்கும் வீழ்ச்சியடைந்தது.

இத்தகைய அபிவிருத்திகளுக்கு மாறாக, தனியார் நீண்டகால, குறுகிய கால மூலதன உட்பாய்ச்சல்கள் தொடர்ந்தும் கணிசமாக அதிகரித்தன. 1994 இல் தனியார் நீண்டகால மூலதன உட்பாய்ச்சல்கள் சிஎஉ 640 இலட்சத்தினால் சிஎஉ 2,810 இலட்சத்திற்கு அதிகரித்தன. எயர்லங்காவின் வானூர்தி மீள் தொகுதியின் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வானூர்தி கொள்வனவிற்கான வெளிநாட்டு நிதியிடல், அரசினால் ஆதரவளிக்கப்பட்ட பேருந்து உடற்கோப்பு செயற்றிட்டம், மற்றும் முதலீட்டுச்சபை செயற்றிட்டங்கள் என்பனவற்றுக்கு கடன்மூலதன வடிவிலான பாரிய மூலதன உட்பாய்ச்சல்களைஇது உள்ளடக்கியிருந்தது. 1994 இல் ஏயர்லங்காவினால் வானூர்தி கொள்வனவு தொடர்பான கொடுப்பனவுகள் எதுவும் மேற்கொள்ளப்படாமையின் காரணமாக தனியார் நீண்டகால மூலதன வெளிபாய்ச்சல்கள் 1993 இன் சிஎஉ 830 இலட்சத்திலிருந்து 1994 இல் சிஎஉ 650 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தன. வெளிப்பாய்ச்சல்கள் முக்கியமாக ஏயர்லங்காவினாலும் பேருந்து உடற்கோப்பு செயற்றிட்டத்திற்காகவும் பெறப்பட்ட கடன்களின் மீளக் கொடுப்பனவுகளையும் மற்றும் முதலீட்டுச் சபையின் கீழான தொழில் முயற்சிகளின் மீளக்கொடுப்பனவுகளையும் உள்ளடக்கியிருந்தன.

தனியார் குறுகியகால மூலதனத்தின் தேறிய உட்பாய்ச்சல்கள் 1993 இன் சிஎஉ 1,050 இலட்சத்திலிருந்து 1994 இல் சிஎஉ 1,820 இலட்சத்திற்கு அதிகரித்தன. 1993 இல் எண்தொகை சார்புரீதியில் குறைவடைந்தமைக்கு வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் பிரிவுகளினால் முதலீட்டுச் சபை அல்லாத நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டிருந்த கடன்களின் பெறுமதி 1993 இல் வங்கிகளின் உள்நாட்டுப் பிரிவுகளுக்கு மாற்றல் செய்யப்பட்டமை ஓரளவு காரணமாக அமைந்தது. இந்த மாற்றலானது 1993 இல் வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் பிரிவுகளுக்கான மீள்கொடுப்பனவுகளுக்கு இட்டுச்சென்றதுடன் இவ்வாண்டில் வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் பிரிவுகளினால் உள்நாட்டுத் தொழில் முயற்சிகளுக்கான தேறிய கடன் வழங்கலை குறைவடையச் செய்து தனியார் குறுங்கால மூலதனத்தில் சார்புரீதியில் தாழ்ந்த தேறிய உட்பாய்ச்சலை விளைவித்தது. 1994 இல் குறுகியகால மூலதன உட்பாய்ச்சல்கள் முதலீட்டுச்சபையின் தொழில் முயற்சிகளுக்கு அவற்றின் தொழிற்பாட்டு மூலதனத்துக்காக வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் பிரிவுகளினால் வழங்கப்பட்ட கடன்களையும் முதலீட்டுச்சபை தொழில் முயற்சிகளின் மூலப்பொருள் இறக்குமதிகளின் நிதியிடலுக்கான கடன் வசதிகளை உள்ளடக்கிய வர்த்தகக் கடன்களையும் உள்ளடக்கியிருந்தன.

## வெளிநாட்டுச் சொத்துக்கள்


இலங்கையின் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் 1993 இறுதியின் சிஎஉ 15,440 இலட்சத்திலிருந்து (ரூ. 1,052,580) 1994 இறுதியில் சிஎஉ 17,920 இலட்சத்திற்கு (ரூ. 1,303,400 இலட்சம்) 16 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்து வெளிநாட்டு மூலதனத்தில் மிதமான தேறிய உட்பாய்ச்சலையும் தற்போதைய அமைப்புச்சீராக்க வசதிகளின்கீழ் அதிகரிக்கப்பட்ட பன்னாட்டு நாணய நிதியத்திலிருந்தான சிஎஉ 470 இலட்சங்கொண்ட உட்பாய்ச்சலையும் பிரதிபலித்தன. வெளிநாட்டுச் சொத்துக்களின் பொதுவான அதிகரிப்பானது மத்திய வங்கியின் வெளிநாட்டுச் சொத்துக்கள் 15 சதவீதத்தினால் சிஎஉ 13,730 இலட்சத்திற்கு அதிகரித்தமையையும் வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டுச் சொத்துக்கள் 24 சதவீதத்தினால் சிஎஉ 4,030 இலட்சத்திற்கு அதிகரித்தமையையும் அரசினால் வைத்திருக்கப்பட்ட வெளிநாட்டுச் சொத்துக்கள் சிஎஉ 160 இலட்சத்தினால் சிஎஉ 80 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தமையையும் பிரதிபலித்தது. மத்திய வங்கியினாலும் அரசினாலும் வைத்திருக்கப்பட்ட வெளிநாட்டுச் சொத்துக்களை உள்ளடக்கிய மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் இவ்விரு ஆண்டுகளுக்குமிடையில் சிஎஉ 1,720 இலட்சத்தினால் சிஎஉ 13,890 இலட்சத்திற்கு அதிகரித்தன. 1994 இறுதியில் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் 1995 இற்கு திட்டமிடப்பட்ட இறக்குமதிகளின் 5.9 மாத இறக்குமதிகளுக்கு நிதியிடப்போதுமானதாக காணப்பட்டவேளையில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் திட்டமிடப்பட்ட இறக்குமதிகளின் 4.6 மாத இறக்குமதிகளுக்கு நிதியிடப்போதுமானதாகக் காணப்பட்டது.

## செலாவணி வீத அசைவுகள்

யப்பானிய யென்னுக்கு எதிராக இலங்கை ரூபா ஆண்டு முழுவதும் தேய்வடைந்தமை நீங்கலாக 1994இல் அனைத்து முக்கிய சருவதேச நாணயங்களுக்கெதிராகவும் இலங்கை ரூபா தளம்பல்களைக் கொண்டிருந்தது. இலங்கை ரூபாவின் அசைவானது பன்னாட்டுச் சந்தையில் நிலவிய வெளிநாட்டுச் செலாவணி மற்றும் நிதிச் சந்தைகளினது தொடர்ந்து மாறுபடும் நிலைமைகளின் காரணமாக முக்கிய நாணயங்களினது குறுக்கு வீதத்திலேற்பட்ட தளம்பல்களையும் இலங்கையில் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் காணப்பட்ட நிலைமைகளையும் பிரதிபலிப்பதாக இருந்தது. 1993 உடன் ஒப்பிடுகையில் யப்பானிய யென், டியூச்மார்க், பிரான்சியபிராங்கு மற்றும் இஸ்டேர்லிங் பவுண் என்பனவற்றுக்கெதிராக ஐக்கிய அமெரிக்க டொலர் கடுமையாக வீழ்ச்சியடைந்தவேளையில் உள்நாட்டுச் சந்தையில் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களின் திரட்டு காணப்பட்டது. இதன் விளைவாக 1993 இறுதிக்கும் 1994 இறுதிக்குமிடையில் இடையீட்டு நாணயமான ஐக்கிய அமெரிக்க டொலருக்கெதிராக இலங்கை ரூபா சிறிதளவாக 0.8 சதவீதத்தினால் மட்டுமே தேய்வடைந்தது. எனினும் சருவதேச சந்தையில் சார்பு ரீதியில் உறுதியான நாணயங்களுக்கெதிராக இலங்கை நாணயம் உயர்ந்த வீதத்தில் தேய்வடைந்தது. உதாரணமாக யப்பானிய யென்னுக்கு எதிராக 11.4 சதவீதத்தினாலும் டியூச் மார்க்கிற்கெதிராக 10.7 சதவீதத்தினாலும் பிரான்சிய பிராங்கிற்கெதிராக 9.1 சதவீதத்தினாலும் இஸ்டேர்லிங் பவுணுக்கெதிராக 5.8 சதவீதத்தினாலும் பெறுமதியில் இலங்கை ரூபா தேய்வடைந்தது. இலங்கை ரூபாவானது இந்திய ரூபாவுக்கெதிராகவும் 1 சதவீதத்தினால் தேய்வடைந்தது. முக்கிய நாணயங்களுக்கெதிரான அசைவுகளின்

## வெளிநாட்டுச் சொத்துக்கள்

காலாண்டுதோறும்




இலங்கை மத்திய வங்கி

## அட்டவணை 1.54

## இலங்கையின் வெளிநாட்டுச் சொத்துக்கள் 1990 – 1994

| கால முடிவில்/உடைமையாளர் | சி. எ. உ. பத்து இலட்சம் (அ) | | | | | பத்து இலட்சம் ரூபாய்களில் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1990 | 1991 | 1992 | 1993 | 1994 | 1990 | 1991 | 1992 | 1993 | 1994 |
| 1. அரசு (ஆ) ... | 19.3 | 26.7 | 23.4 | 23.4 | 15.6 | 1,104.5 | 1,631.6 | 1,482.1 | 1,597.2 | 1,132.3 |
| 2. அரசு முகவரகங்கள் ... | – | – | – | – | – | 1.1 | 1.1 | 1.0 | 1.1 | – |
| 3. மத்திய வங்கி ... | 286.3 | 475.9 | 657.9 | 1,193.7 | 1,373.3 | 16,399.2 | 28,956.9 | 41,591.7 | 81,403.6 | 99,858.5 |
| 4. வர்த்தக வங்கிகள் ... | 296.4 | 306.2 | 365.7 | 326.4 | 403.3 | 16,966.8 | 18,633.4 | 23,160.7 | 22,256.2 | 29,349.3 |
| 5. மொத்தம் ... | 602.0 | 808.8 | 1,047.0 | 1,543.5 | 1,792.2 | 34,471.6 | 49,223.0 | 66,235.5 | 105,258.1 | 130,340.1 |
| 6. மாதங்களின்படி மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் ... | | | | | | | | | | |
| 6.1 வணிக வர்த்தக இறக்குமதிகள் ... | 3.7 | 4.4 | 5.1 | 6.5 | 6.5 | | | | | |
| 6.2 பொருட்கள் பணிகளின் இறக்குமதி ... | 3.0 | 3.6 | 4.2 | 5.5 | 5.5 | | | | | |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

(அ) மத்திய வங்கியின் பன்னாட்டு ஒதுக்குகளின் கீழான சில விடயங்கள் மட்டும் பன்னாட்டு நாணயநிதியத்துடன் இணங்கப்பட்ட பிரதிநிதித்துவ வீதங்களில் மாற்றப்பட்டுள்ளன. இவை தவிர்ந்த ஏனையவை கீழே தரப்பட்டுள்ள ஆண்டு முடிவு வீதங்களில் மாற்றப்பட்டுள்ளன.


| ஆண்டு | 1990 | 1991 | 1992 | 1993 | 1994 |
|---|---|---|---|---|---|
| சிஎஉ ஒன்றுக்கு ரூபா | 57.25 | 60.85 | 63.33 | 68.19 | 72.76 |

(ஆ) திறைசேரி துணைச் செயலாளரின் சிறப்புச் சுழல்வுக் கொடுகடன் நிலுவைகளை உள்ளடக்குவதற்காக 1985 இலிருந்தான எண்தொகைகள் திருத்தியமைக்கப்பட்டுள்ளன.

# தாக்கமுள்ள செலாவணி வீதங்கள்*

காலாண்டுச் சராசரிகள்

1985 = 100




* வீழ்ச்சி தேய்வினைக் குறிக்கின்றது.

இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 1.55

## செலாவணி வீத அசைவுகள் 1990 – 1994

| நாணயம் | வெளிநாட்டு நாணய அலகு ஒன்றிற்கு ஆண்டு இறுதி வீதங்கள் ரூபாய்களில் | | | | | முன்னைய ஆண்டினைவிட சதவீதமாற்றம் (அ) | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1990 | 1991 | 1992 | 1993 | 1994 | 1990 | 1991 | 1992 | 1993 | 1994 |
| 1. டியூச் மார்க் ... | 26.1554 | 28.0178 | 28.5714 | 28.7371 | 32.1622 | -9.39 | -6.65 | -1.94 | -0.58 | -10.65 |
| 2. பிரான்சிய பிராங்கு ... | 7.7125 | 8.1924 | 8.3857 | 8.4655 | 9.3151 | -10.08 | -5.86 | -2.31 | -0.94 | -9.12 |
| 3. இந்திய ரூபாய் ... | 2.2332 | 1.6352 | 1.7520 | 1.5774 | 1.5926 | 5.69 | 36.57 | -6.67 | 11.07 | -0.95 |
| 4. யப்பானிய யென் ... | 0.2943 | 0.3390 | 0.3699 | 0.4433 | 0.5004 | -4.32 | -13.19 | -8.35 | -16.56 | -11.41 |
| 5. ஸ்டேர்லிங் பவுண் ... | 75.5908 | 79.5820 | 69.4278 | 73.4972 | 78.0513 | -13.96 | -5.02 | 14.63 | -5.54 | -5.83 |
| 6. ஐ. அ. டொலர் ... | 40.2400 | 42.5800 | 46.0000 | 49.5615 | 49.9800 | -0.60 | -5.50 | -7.43 | -7.19 | -0.84 |
| 7. சிஎஉ ... | 57.2479 | 60.8464 | 63.3337 | 68.1932 | 72.7604 | -7.54 | -5.91 | -3.93 | -7.13 | -6.28 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

(அ) இலங்கை ரூபாவுக்குச் சமமான வெளிநாட்டு நாணயங்களின் அடிப்படையில் மாற்றங்கள் கணிக்கப்பட்டுள்ளன.

குறிப்பு: சய அடையாளம் பெறுமானத் தேய்வினைக் குறிப்பிடுகின்றது.

கூட்டுவிளைவாக சிஎஉ வுக்கெதிராக இலங்கை ரூபா முன்னைய ஆண்டில் அவதானிக்கப்பட்ட 7.1 சதவீத தேய்வுடன் ஒப்பிடுகையில் 6.3 சதவீதத்தினால் தேய்வடைந்தது.

இந்த செலாவணிவீத அசைவுகளின் இணைந்த தாக்கத்தினைப் பிரதிபலிக்கும் வகையில் முக்கிய வர்த்தகப் பங்காளிகள் தொடர்பாக நிறையேற்றப்பட்ட வர்த்தக பெயரளவு செலாவணி வீதம் என வரைவிலக்கணம் தரப்படும் இலங்கையின் பெயரளவு தாக்கமுள்ள செலாவணி வீதம் 1993 திசெம்பரிலிருந்து 1994 திசெம்பர்வரை புள்ளிக்குப் புள்ளி அடிப்படையில் 5.1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இலங்கைக்கும் முக்கிய வர்த்தகப் பங்காளர்களுக்குமிடையே பணவீக்க மாறுபாடுகளுக்குச் சீராக்கஞ் செய்யப்பட்ட பெயரளவு செலாவணி வீதமாகிய உண்மைத் தாக்கமுள்ள செலவாணிவீதம் 3.2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. 1994 இல் பெயரளவு தாக்கமுள்ள பயன்தரு செலாவணி வீதத்தின் ஆண்டுச்சராசரி 4.6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தவேளையில் உண்மைத்தாக்கமுள்ள செலாவணி வீதத்தின் ஆண்டுச்சராசரி 3.2 சதவீதத்தினால் அதிகரித்தது.

## வெளிநாட்டுப் படுகடன்

1994 இறுதியில் இலங்கையின் வெளிநாட்டுப்படுகடன் சிஎஉ 60,890 இலட்சம் என மதிப்பிடப்பட்டுள்ளதுடன் 1993 இறுதியிலிருந்து 1994 இறுதிவரை சிஎஉ 5,040 இலட்சங்கொண்ட அதிகரிப்பையும் பதிவுசெய்துள்ளது. இந்த அத்தியாயத்தில் மூலதனக் கணக்கின் கீழ் எடுத்துக்கூறப்பட்ட தனியார்துறைக்கான கடன் வழுங்கலின் அதிகரிப்பினை இவ்வதிகரிப்பு பெருமளவு பிரதிபலித்தது. 1994 இறுதியில் வெளிநின்ற கடன்களின் 69 சதவீதத்திற்கு வகைகூறிய அரசின் நடுத்தரகால, நீண்டகாலக் கடன்கள் யப்பான், ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பு என்பனவற்றினால் வழங்கப்பட்ட சலுகைக் கடன் வசதிகளின் முதன்மைக் காரணத்தினால் சிஎஉ 690 இலட்சத்தினால் அதிகரித்தன. 1994 இல் பன்னாட்டு நாணய நிதியத்துடனான அதிகரிக்கப்பட்ட அமைப்புச்சீராக்க வசதிகளின் மூன்றாவது ஆண்டு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழான முதலாவது தொகுதியின் சிஎஉ 560 இலட்சம் கொண்ட தொகையொன்றினையும் இலங்கை பெற்றுக் கொண்டது. அமைப்புச் சீராக்க வசதிகளின் கீழ் முன்னர் பெறப்பட்ட கடன் ஒன்று தொடர்பாக சிஎஉ 90 இலட்சங்கொண்ட தொகையொன்றின் மீளச்செலுத்தலுடன் பன்னாட்டு சருவதேச நாணய நிதியத்துக்கான வெளிநின்ற படுகடன் 1994 இறுதியில் சிஎஉ 470 இலட்சத்தினால் சிஎஉ 4,230 இலட்சத்திற்கு அதிகரித்தது.

## படுகடன் பணிக் கொடுப்பனவுகள்

நடுத்தர, நீண்டகால கடன்களின் தீர்ப்பனவு மற்றும் அனைத்து வெளிநாட்டுப் படுகடன்கள் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் என்பனவற்றை உள்ளடக்கிய படுகடன் பணிக்கொடுப்பனவுகள் 1994 இல் சிஎஉ 150 இலட்சத்தினால் அல்லது 4 சதவீதத்தினால் சிஎஉ 3,720 இலட்சத்திற்கு அதிகரித்தன. இது கடன் தீர்ப்பனவுகள் சிஎஉ 20 இலட்சத்தினால் வீழ்ச்சியடைந்தமையினதும் வட்டிக் கொடுப்பனவுகள் சிஎஉ 170 இலட்சத்தினால் அதிகரித்தமையினதும் இணைந்த

## அட்டவணை 1.56

### பகிர்ந்தளிக்கப்பட்டதும் வெளிநின்றதுமான வெளிநாட்டுப் படுகடன் 1990 – 1994

| | சிஎஉ பத்து இலட்சம் | | | | | பத்து இலட்சம் ரூபாய்களில் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1990 | 1991 | 1992 | 1993 (அ) | 1994 (ஆ) | 1990 | 1991 | 1992 | 1993 (அ) | 1994 (ஆ) |
| 1. நடுத்தர, நீண்டகால படுகடன் ... | 3,822.4 | 4,246.0 | 4,624.3 | 5,059.8 | 5,381.8 | 216,846.3 | 255,798.0 | 289,678.6 | 345,083.2 | 390,285.1 |
| 1.1 அரசு ... | 3,184.4 | 3,589.0 | 3,840.8 | 4,122.7 | 4,192.0 | 182,300.3 | 218,400.0 | 243,250.6 | 281,142.3 | 305,010.8 |
| 1.2 அரச உத்தரவாதத்துடனான அரச கூட்டுத்தாபனங்கள் ... | 136.0 | 141.0 | 175.6 | 246.4 | 398.3 | 7,781.0 | 8,578.0 | 11,120.7 | 16,804.0 | 28,977.0 |
| 1.3 அரச உத்தரவாதத்துடனான தனியார்துறை ... | 108.0 | 120.0 | 129.0 | 144.0 | 156.5 | 6,185.0 | 7,319.0 | 8,172.8 | 9,821.4 | 11,384.0 |
| 1.4 அரச உத்தரவாதமற்ற அரச கூட்டுத்தாபனங்கள் ... | 5.0 | 3.0 | 2.4 | 1.4 | 0.4 | 290.0 | 197.0 | 151.0 | 96.6 | 29.5 |
| 1.5 அரச உத்தரவாதமற்ற தனியார்துறை ... | 101.0 | 113.0 | 138.7 | 169.6 | 211.9 | 5,802.0 | 6,867.0 | 8,784.4 | 11,565.5 | 15,416.8 |
| 1.6 ப. நா. நி. எடுப்பனவுகள் ... | 288.0 | 280.0 | 337.8 | 375.7 | 422.8 | 14,488.0 | 14,437.0 | 18,199.1 | 25,653.3 | 29,467.0 |
| 2. குறுங்காலப் படுகடன் ... | 294.0 | 350.0 | 420.6 | 525.7 | 707.4 | 16,820.0 | 20,200.0 | 24,578.6 | 31,689.0 | 44,621.5 |
| 2.1 அரசு ... | – | 21.0 | – | – | – | – | 1,275.0 | – | – | – |
| 2.2 மத்திய வங்கிக் கடன்பாடுகள் ... | – | – | – | – | – | – | – | – | – | – |
| 2.3 ஏனையவை (இ) ... | 294.0 | 329.0 | 420.6 | 525.7 | 707.4 | 16,820.0 | 18,925.0 | 24,578.6 | 31,689.0 | 44,621.5 |
| 3. மொத்தப் படுகடன் (1 + 2) ... | 4,116.4 | 4,596.0 | 5,044.9 | 5,585.5 | 6,089.2 | 233,666.3 | 275,998.0 | 314,257.2 | 376,772.2 | 434,906.6 |
| **ஒப்பந்தக் குறிப்பு வகைகள்** | | | | | | | | | | |
| **நடுத்தர நீண்டகாலக் கடன்கள்** | | | | | | | | | | |
| (1) செயற்றிட்டக் கடன்கள் ... | 2,179.0 | 2,393.0 | 2,555.9 | 2,710.8 | 2,891.0 | 124,775.0 | 145,631.0 | 161,873.4 | 184,859.1 | 210,353.7 |
| (2) செயற்றிட்டமல்லாக் கடன்கள் ... | 1,010.0 | 1,177.0 | 1,251.1 | 1,304.9 | 1,239.0 | 57,832.0 | 71,600.0 | 79,233.7 | 88,984.0 | 90,146.7 |
| (3) நிரம்பலர் கொடுகடன் ... | 33.0 | 30.0 | 61.2 | 118.6 | 110.6 | 1,892.0 | 1,805.0 | 3,873.4 | 8,087.1 | 8,050.5 |
| (4) ப. நா. நி. பொறுப்பாண்மை நிதியக் கடன்கள் ... | 0.4 | – | – | – | – | 19.3 | – | – | – | – |
| (5) ப. நா. நி. – ஏனைய கடன்கள்... | 288.0 | 280.0 | 337.8 | 375.7 | 422.8 | 14,488.0 | 14,437.0 | 18,199.1 | 25,653.3 | 29,467.0 |
| (6) ஏனைய கடன்கள் (ஈ) ... | 312.0 | 366.0 | 418.3 | 549.8 | 718.4 | 17,840.0 | 22,325.0 | 26,499.0 | 37,449.7 | 52,267.2 |

(அ) திருத்தப்பட்டது. (ஆ) தற்காலிகமானவை.

(இ) இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ஏற்றுக்கொள்ளப்பட்ட கொடுகடன்களையும்; வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் பிரிவில் இருந்தான, வர்த்தக கொடுகடன்களையும் குறுங்காலக் கடன்பாடுகளையும் உள்ளடக்குகின்றது.

(ஈ) அரச கூட்டுத்தாபனங்கள், மற்றும் தனியார் துறை கூட்டுநிலையங்களின் நீண்ட காலக் கடன்களையும் உள்ளடக்கும்.

மூலங்கள் : இலங்கை மத்திய வங்கி.
வெளிநாட்டு மூலவளங்கள் திணைக்களம்.

அட்டவணை 1.57

## வெளிநாட்டுப் படுகடன் பணிக் கொடுப்பனவுகள் 1990 – 1994

| விடயம் | சி எ உ பத்து இலட்சம் | | | | | பத்து இலட்சம் ரூபாய்களில் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1990 | 1991 | 1992 | 1993(அ) | 1994 (ஆ) | 1990 | 1991 | 1992 | 1993 (அ) | 1994 (ஆ) |
| 1. படுகடன் பணிக் கொடுப்பனவுகள் ... | 328.6 | 356.3 | 382.3 | 357.5 | 372.4 | 17,972.0 | 20,173.0 | 23,671.0 | 24,066.4 | 26,332.6 |
| 1.1 கடன் தீர்ப்பனவுகள் ... | 182.0 | 200.5 | 231.0 | 213.2 | 211.0 | 9,975.0 | 11,353.0 | 14,328.8 | 14,316.8 | 14,892.4 |
| (i) ப. நா. நிதியத்திற்கு ... | 31.8 | 63.6 | 54.4 | 18.1 | 8.9 | 1,731.0 | 3,600.0 | 3,359.4 | 1,118.8 | 615.7 |
| (ii) ஏனையவற்றிற்கு ... | 150.2 | 136.9 | 176.6 | 195.1 | 202.1 | 8,244.0 | 7,753.0 | 10,969.4 | 13,198.0 | 14,276.7 |
| 1.2 வட்டிக் கொடுப்பனவுகள் ... | 146.6 | 155.8 | 151.3 | 144.3 | 161.4 | 7,997.0 | 8,820.0 | 9,342.2 | 9,749.6 | 11,440.2 |
| (i) ப. நா. நிதியத்திற்கு ... | 20.6 | 14.7 | 7.8 | 5.4 | 4.9 | 1,121.0 | 830.0 | 480.5 | 362.8 | 348.3 |
| (ii) ஏனையவற்றிற்கு ... | 126.0 | 141.1 | 143.5 | 138.9 | 156.5 | 6,876.0 | 7,990.0 | 8,861.7 | 9,386.8 | 11,091.9 |
| 2. வணிகப் பொருட்களின் ஏற்றுமதிகளிலும் பணிகளிலுமிருந்தான வருவாய்கள் ... | 1,847.0 | 1,930.7 | 2,233.7 | 2,581.3 | 2,862.4 | 100,845.5 | 109,275.0 | 138,111.0 | 174,223.9 | 202,916.5 |
| 3. வணிகப் பொருட்கள் ஏற்றுமதிகள், பணிகள் தனியார் மாற்றல்களிலிருந்தான பெறுகைகள் | 2,143.0 | 2,253.7 | 2,622.6 | 3,034.9 | 3,361.3 | 116,899.5 | 127,586.0 | 162,147.7 | 204,815.4 | 238,261.6 |
| 4. படுகடன் பணி விகிதங்கள் (இ) | | | | | | | | | | |
| 4.1 மேலுள்ள 2 இன் சதவீதமாக | | | | | | | | | | |
| (i) முழு மொத்த விகிதம் ... | 17.8 | 18.5 | 17.1 | 13.8 | 13.0 | 17.8 | 18.5 | 17.1 | 13.8 | 13.0 |
| (ii) ப. நா. நி. கொடுக்கல் வாங்கல்கள் தவிர்ந்த ... | 15.0 | 14.4 | 14.3 | 12.9 | 12.5 | 15.0 | 14.4 | 14.4 | 12.9 | 12.5 |
| 4.2 மேலுள்ள 3 இன் சதவீதமாக | | | | | | | | | | |
| (i) முழு மொத்த விகிதம் ... | 15.3 | 15.8 | 14.6 | 11.8 | 11.1 | 15.4 | 15.8 | 14.6 | 11.8 | 11.1 |
| (ii) ப. நா. நி. கொடுக்கல் வாங்கல்கள் தவிர்ந்த ... | 12.9 | 12.3 | 12.2 | 11.0 | 10.7 | 12.9 | 12.3 | 12.2 | 11.0 | 10.6 |
| 5. அரச படுகடன் பணிக்கொடுப்பனவுகள் | | | | | | | | | | |
| 5.1 மேலே உள்ள 1 இன் பங்காக (ஈ) | 168.0 | 178.0 | 205.9 | 221.6 | 220.9 | 9,141.0 | 10,075.0 | 12,713.0 | 14,933.5 | 15,625.9 |
| 5.2 மேலே உள்ள 1 இன் சதவீதமாக | 51.1 | 49.9 | 51.1 | 62.0 | 59.3 | 50.9 | 49.9 | 51.0 | 62.4 | 59.3 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

(அ) திருத்தியமைக்கப்பட்டது. (ஆ) தற்காலிகமானவை.

(இ) ரூபாய் பெறுமதியிலும் சி எ உ. பெறுமதியிலும் கணிக்கப்பட்ட படுகடன் பணி விகிதம் வேறுபடுவதற்கு ஆண்டுப் பகுதியில் செலாவணி வீதங்களில் ஏற்பட்ட மாறுபாடுகளே காரணமாகும்.

(ஈ) ப. நா. நி. கொடுக்கல் வாங்கல் தவிர்த்து.

விளைவாகும். பன்னாட்டு நாணய நிதியமல்லா கடன்களின் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் சிஎஉ 70 இலட்சத்தினால் அதிகரித்தவேளையில் பன்னாட்டு நாணய நிதியத்துக்கான அத்தகைய கொடுப்பனவுகள் 1993 இன் சிஎஉ 180 இலட்சத்திலிருந்து 1994 இல் சிஎஉ 90 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தன. பன்னாட்டு நாணய நிதியக் கடன்களின் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் சிறிதளவு வீழ்ச்சியடைந்தவேளையில் பன்னாட்டு நாணய நிதியமல்லா கடன்மீதான வட்டிக் கொடுப்பனவுகள் சிஎஉ 180 இலட்சத்தினால் அதிகரித்தன. எனினும் இவ்வாண்டில் படுகடன் பணிக்கொடுப்பனவுகள் வீதத்தினைவிட அதிகரித்த வீதமொன்றில் பணிகள் பொருட்களின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் அதிகரித்தமையினால் படுகடன் பணிக்கொடுப்பனவு விகிதம் 1993 இன் 13.8 சதவீதத்திலிருந்து 1994 இல் 13.0 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. பொருட்கள் பணிகள் மற்றும் தனியார் மாற்றல்கள் என்பனவற்றின் ஏற்றுமதியிலிருந்துபெற்ற பெறுகைகளின் விகிதமொன்றாக படுகடன் பணிக்கொடுப்பனவுகள் 11.8 சதவீதத்திலிருந்த 11.1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தன.